**தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபை - 2023**

-----------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் (''அதிகாரசபை'') 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அறிக்கைகள் தாமதித்ததன் காரணமாக அதிகாரசபை சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான அறிக்கை 2024 திசெம்பர் 10 ஆந் திகதி மூன்று மொழிகளிலும் பாராளுமனற்த்தில் முன்வைக்கப்பட்டது. மேலும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த:து, அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களானது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனி நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல மற்றும் காசுப்பாய்ச்சலினை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையியல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபையை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் சபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக மன்றத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான

அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகாரசபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க அதிகாரசபையின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| **உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான காப்பீட்டு கணிப்பீட்டு நட்டம் ரூபா 958,888 இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் 114 ஆம் பந்தியின் பிரகாரம் ஏனைய விபரமான வருமானத்தின் கீழ் தனியாகக் காட்டுவதற்குப் பதிலாக பணிக்கொடைச் செலவுடன் சேர்த்து காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான இறுதித் கணக்குகளில் சரி செய்யப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பாதீட்டு கணிப்பீட்டு நட்டத்தை ஏனைய விபரமான வருமானத்தின் கீழ் காட்டுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சர்வதேச தொழில் அமைப்பு (ILO) செயற்திட்டத்திற்காக 2024 சனவரி 18 ஆந் திகதி கொள்வனவு செய்த ரூபா 548,785 தொகையான கமரா (Cannon EOS RP Mirrorless) மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டு செம்மையாக்கலாக திரண்ட நிதியத்திற்கு கணக்கீடு செய்தமையின் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் திரண்ட மிகைகள் அத்தொகையால் அதிகரித்திருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான இறுதித் கணக்குகளில் சரி செய்யப்பட்டுள்ளது. | ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் அந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | Cluster Development Program இன் கீழ் கூட்டுறவு சங்கங்களின் மூலம் தொடர்புபடுத்திய காளான் வளர்ப்பு தொகுப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2024 சனவரி 19 ஆந் திகதி கிடைத்த ரூபா 1,000,000 முற்பணத்தை மீளாய்வாண்டிற்கான முற்பணக் கொடுப்பனவாக கணக்கீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான இறுதித் கணக்குகளில் சரி செய்யப்பட்டுள்ளது. | ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் அந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியாக அடையாங்கண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | பட்டதாரிகள் தொழில்முயற்சி பூங்கா - 2023 இரண்டாவது கட்டத்திற்காக மீளாய்வாண்டிற்கு மொத்தமாக ரூபா 5,011,143 செலவுகள் கணக்கீடு செய்யாமையின் காரணமாக மிகைகள் அத்தொகையால் அதிகரித்தும் நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.. | பணம் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் பணம் இல்லாமையின் காரணமாக 2024 ஆம் ஆண்டின் போது பணம் வழங்கப்பட்டது. | கணக்காண்டிற்கான செலவுகள் அந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | துணை அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 35,337,444 | 26,673,472 | 8,663,472 | 2024 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்பட்டுள்ளது. | கணக்கு மீதிகளை துணை அறிக்கைகளுடன் ஒப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் அதிகாரசபைக்கு 60 சதவீத உரிமையுடன் துணைக் கம்பனியான B-Express Ltd நிறுவனத்தையும் உள்ளடக்கி இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 26 இன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கு தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்ட உடன் 2024 ஆம் ஆண்டு வரையான கணக்குகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கு எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 255,250 முற்பணம் மீளாய்வாண்டின் போது தீர்த்துவைக்கப்படாதிருந்தும் அவை தொடர்பான விலைப்பட்டியல்கள் கணக்காய்விற்குச் | தேவையான தகவல்களை மாவட்ட செயலகங்களிடமிருந்து பெற்று கணக்காய்விற்கு வழங்குவதற்கு இணங்கிக்கொள்கிறேன். | பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்படாததனால் உரிய முற்பணங்களை தீர்த்துவைத்தல்களின் சரியான தன்மையை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | | பேணப்பட வேண்டியதுடளன் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அதிகாரசபையின் துணை கம்பனியிடமிருந்து பெறவேண்டிக் காணப்பட்ட ரூபா 500,000 பெறுமதியை அறவீடு செய்வதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மிகுதிப் பணத்தை எதிர்வரும் காலங்களில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40ஆம் பிரிவு | அதிகாரசபைக்கு ஒரு உள்ளக கணக்காவாய்வாளரினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1574/Vol.II ஆம் இலக்க 2023/10/13 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் பதவியினை உருவாக்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க தற்பொழுது வரிசை அமைச்சினூடாக ஒரு உள்ளக கணக்காய்வாளர் பதில் கடமை பார்க்கும் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் துரிதமாக ஒரு உள்ளனகக் கணக்காய்வாளரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது வியாபார முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப் பட்ட பொது வியாபார முயற்சிகளுக்கான செயற்பாட்டு வழிகாட்டிக் கோவையின் 6.6 ஆம் பிரிவு | 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியபோதிலும் ,488 நாட்கள் காலதாமதத்தின் பின்னர் 2025 யூலை 02 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டு முதல் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 119 | PD-6379 ஆம் இலக்க கெப் வாகனம் 2020 ஆம் ஆண்டின் போது தலைவரினால் ஓட்டிச் செல்லும் போது உருவாகிய கோளாரினை திருத்தம் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 498,110 பணத்தை தலைவரிடமிருந்து அறவீடு செய்ய வேண்டும் என நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு 2025 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழில் அமைச்சின் சட்ட பிரிவினால் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு இது சம்பந்தமாக அறிக்கையிடப்பட்டுள் ளதுடன் சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கபப்பட்டுள்ளது. மேலும் எங்கள் நிறுவனத்தினாலும் இது தொடர்பான விடயம் ஆராயப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்களின் சிபாரிசுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

(ii) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை யினால் திருத்தப்பட்ட

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | நிதிப் பிரமாணம் 371(5) | உப கட்டுநிதியானது அவை வழங்கப்பட்ட நிதி ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 141 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 1,018,809 தொகையான முற்பணங்களானது பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் முடிவடைந்திருந்தும் 2025 யூன் 30 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2017, 2018, 2019, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட முறையே ரூபா 338,250, ரூபா 584,330, ரூபா 400,072, ரூபா 171,450 மற்றும் ரூபா 1,316,200 என்பனவாக மொத்தமாக ரூபா 2,810,302 தொகையான முற்பணங்களும் 2025 யூன் 30 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 செப்தெம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர் தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட உடன் முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (2) | நிதிப் பிரமாணம் 756 | உரிய நிதி ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைத்தலானது அடுத்துவரும் நிதி ஆண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்குரிய பொருள் மீளாய்வு அறிக்கை 2025 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கையானது எதிர்வரும் காலங்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 2024 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள் ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைக்கு இணங்க பொருள் மீளாய்வினை மேற்கொண்டு அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,221,752 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,740,583 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 5,481,169 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு நிருவாகச் செலவுகள் ரூபா 7,562,505 இனாலும் நிகழ்சித்திட்ட செலவுகள் ரூபா 12,898,194 இனாலும் அதிகரிக்கையில் மீண்டுவரும் மானியம் ரூபா 10,991,869 ஆல் மற்றும் மூலதன மானியம் ரூபா 13,280,566 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அதிகாரசபையினால் 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 9,600,000 செலவு செய்து கொள்வனவு செய்த வியாபார கட்டமைப்பு கணக்காய்வுத் திகதியான 2024 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையும் செயற்படும் நிலையில் காணப்படவில்லை. | Made in Sri Lanka வியாபார கட்டமைப்பு சம்பந்தமான தகவல்கள் தொழில்நுட்ப பிரிவினால் முறைமைப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டன. முகவர் உடன்படிக்கை காலாவதியாகியுள்ளதனால் வியாபார கட்டமைப்பை பராமரிக்கும் வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு அல்லது | எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் வியாபார கட்டமைப்பினை செயற்படும் நிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | Showcase Site ஒன்றாக மீண்டும் பிரதிநிதித்திதுவப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 13(ஆ), (எ) பிரிவுகளின் பிரகாரம் அதிகாரசபையின் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்தி அது தொடர்பான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (i) | வெளிநாட்டுச் சந்தைகளை வெற்றிகொள்வதற்கு முடியுமான வகையில் உள்நாட்டு தொழில் முயற்சிகளை சர்வதேசமயப்படுத்தும் குறிக்கோளில் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெளியே தோற்றுவித்தல் மற்றும் அமுல்ப்படுத்துதலில் அக்கறை காட்டுவதற்கு ஊக்குவித்தல் | 2019 ஆம் ஆண்டிலிருந்து அமுல்ப்படுத்துகின்ற “Made in Sri Lanka” வியாபார கட்டமைப்பினுள் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களை உள்நாட்டினைப் போல வெளிநாட்டுச் சந்தைகளுக்கும் எடுத்துச் செல்வதற்கு முடியுமாக உள்ளதுடன் அதன் மூலம் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வாய்ப்பு உருவாகும். மேலும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை சுற்றுலா பயணிகளுக்கு வழங்குவதன் மூலம் சர்வதேச சந்தைப்படுத்தல் ஒருங்கிணைப்பினை கட்டி எழுப்புவதற்கான இயலுமை கிடைத்துள்ளது. | அதிகாரச்சட்டத்திலுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | தொழில்நுட்ப மேம்பாடு, உற்பத்திப் பொருள் அபிவிருத்தி, | தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான ஆராய்ச்சிகள் மற்றும் | அதிகாரச்சட்டத்திலுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆக்கவுரிமையை வணிகமயப்படுத்துதல் என்பவை தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தினை தோற்றுவித்தல். | அபிவிருத்தி செய்தல் நிகழ்சித்திட்டங்களை மாகந்துரவில் அமைந்துள்ள முன்செயன்முறைப்படுத்தல் நிலையத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம். தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தினை தோற்று விப்பதற்கு பல தடவைகள் முயற்சி செய்யப்பட்டிருந்தும் இன்றுவரை தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ILO செயற்திட்டம் சம்பந்தமாக 2023 யூன் 13 ஆந் திகதி சர்வதேச தொழில் நிறுவனத்திற்கும் தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபைக்குமிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் ஏற்பாடுகள் வழங்கப்படாதிருந்தும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் செயற்திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 13 உத்தியோகத்தர்களுக்கு மொத்தமாக ரூபா 676,880 ஆன மாதாந்த படி செயற்திட்டத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக கடமை நேரங்களுக்கு அப்பால் மற்று ம் வார இறுதி நாட்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு இப்படிகள் செலுத்தப்பட்டதுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்று க்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே ILO இற்கும் NEDA இற்கும் இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் செலவு மதிப்பீட்டில் போக்குவரத்து செலவுகளை மீளளிப்புச் செய்தல் என்ற தலைப்பில் மேற்கூறிய செலவுகள் உள்ளடக்கப்பட்டதுடன் அதற்காக ILO அங்கீகாரம் கிடைத்துள்ளதனால் இது அதிகாரம் பெற்ற கொடுக்கல் வாங்கலாகும். | செயற்திட்டங்கனளை நிறைவேற்றும் போது உடன்படிக்கையிலுள் ள நிபந்தனைகளைப் பின்பற்றுதல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பட்டதாரிகள் தொழில் முயற்சி பூங்கா - 2023 | பட்டதாரிகள் தொழில் முயற்சி பூங்கா இரண்டாவது | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்சித்திட்டத்தின் கீழ் 30 மாணவர்களுக்கு ரூபா 250,000 வீதம் நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 28 நபர்களுக்கு மாத்திரம் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதன் போது நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு அங்கீகரித்த இரண்டு தொழில் முயற்சியாளர்களுக்கு பதிலாக நிதி ஏற்பாட்டிற்கு தகைமை பெற்றிருக்காத இரண்டு தொழில் முயற்சியாளர்களு க்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டது. | கட்டத்திற்காக பணத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் பணம் இல்லாததன் காரணமைாக 2024 ஆம் ஆண்டின் போது பணம் வழங்கப்பட்டது. | நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது தொழில்முயற்சி அபரிவிருத்தி செலவுகளாக ரூபா 25,703,580 செலவு செய்யப்பட்டிருந்தும் ஒவ்வொரு நிகழ்ச்சிதிட்டம் நடைபெற்ற இடம், திகதி, பயிலுனர்களின் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட்ட செலவு, செலுத்திய முற்பணம், அந்த முற்பணத்தை தீர்த்து வைத்தல் என்பன தொடர்பான விபரம் மற்றும் பயிலுனர்களின் தொழில் முயற்சி அபிவிருத்தி செயன்முன்னேற்றம் போன்ற அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அறிக்கை அல்லது ஒரு தரவு முறைமை அதிகாரசபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. | அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அறிக்கை அல்லது ஒரு தரவு அடிப்படையானது உரிய பிரிவில் பேணப்பட்டிருக்கவில்லை. எனினும் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்குமுரிய அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய கோவைகள் ஒவ்வொரு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பொறுப்பில் காணப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் வருடாந்தம் அந்த தவல்களை உள்ளடக்கி செயல்முன்னேற்ற அறிக்கையை தயாரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. | நடாத்தப்பட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்சித்திட்டம் தொடர்பான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய ஒரு தரவு முறைமையை ஸ்தாபித்து நாளதுவரையாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிகாரசபைக்கு ISO சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை மொத்தமாக ரூபா 465,284 பணம் செலவு செய்யப்பட்டிருந்தும் 2025 யூன் 30 ஆந் திகதி வரையும் ISO சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | இக்காலப்பகுதியில் நிறு வனம் பல இடங்களுக்கு மாற்றப்பட்டதனால் ISO சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான சுற்றாடலினை மீண்டும் தயார்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க அளவு பணம் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டதுடன் ISO போன்ற சான்றிதழினைப் | திட்டமிடப்பட்டவாறு ISO சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபையின் நடவடிக்கையை இன்னும் முறைமைப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. மேலும் தற்பொழுது எங்கள் அதிகாரசபை இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, சிறிய தொழிலி முயற்சி பிரிவு ஆகிய நிறுவனங்களை ஒன்றிணைத்து தனி ஒரு நிறுவனத்தினைத் தோற்றுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. | |

**4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2016 ஏப்ரல் 11 ஆந் திகதிய NP/IND/CM/16/02 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் கீழ் மாகந்துர கைத்தொழில் பேட்டையின் முன் செயன்முறை தொழில்நுட்ப பரிமாற்று நிலையமாக (Incubator and Technology Transfer Centre) பங்கு உரிமையில் 60 சதவீதம் அதிகாரசபைக்கு கிடைக்கும் வகையில் வரையறுத்த ஒரு கம்பனியாக 2017 ஆம் ஆண்டின் போது கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட B Express Ltd என்ற பெயரிலான கம்பனிக்கு 2017 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை நிதிக்கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அது சம்பந்தமாக பல சந்தர்ப்பங்களில் முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தியிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2025 ஆகஸ்ட் 25 ஆந் திககி வரை நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் கணக்காளரினால் 2024 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டன. பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்ட உடன் அக்கணக்குகளை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பட்டய தொழில் முயற்சிகளின் மூலம் (Franchise Shop) ஆகக் குறைந்தது 25 வழங்குனர்களை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அவ்வாறான ஒரு தொழில் முயற்சியேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் Made in Sri Lanka வியாபார கட்டமைப்பினுள் ஆகக் குறைந்தது 1000 வழங்குனர்களை அறிமுகப்படுத்துவதற்கு பதிவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் 216 வழங்குனர்கள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். | ஆட்களை வழங்குவதற்கு முடியாமை மற்றும் 2023 ஆம் ஆண்டில் போதியளவு பணம் இல்லாததன் காரணமாக அப்பணம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டது. Made in Sri Lanka வியாபார கட்டமைப்பு சம்பந்தாமாக முறைமைப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டன. முகவர் உடன்படிக்கை காலாவதியாகி உள்ளதனால் புதிய வாடிக்கையாளரினை தேடிக் கண்டுபிடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. | அடைந்து கொள்ளக்கூடிய இலக்குகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் திட்டமிட்ட செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |